முருகப்பெருமான் துணை

**மகான் விறன்மிண்ட நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.08.2022**, செவ்வாய்கிழமை

1. அருள்ஞான வழிகாட்டும் அரங்கா
   அறமீந்து உயிர்காக்கும் தேசிகா
   இருள்நீக்கி பேருலகை காக்கும்
   இணையிலா ஏழாம் படைவீடு படைத்த குருராஜா
2. அரசனே உன் பெருமை கூறி
   அறிவிப்பேன் அருளாசி தன்னை
   வரமென சுபகிருது யாழி திங்கள்
   வழங்குவேன் சப்தம திகதி குசன்வாரம்
   (சுபகிருது வருடம் ஆவணி மாதம் 07 நாள், 23.08.2022 செவ்வாய்கிழமை)
3. வாரமதில் உலகோர் நலம்பெற
   வழங்குவேன் விறன்மிண்ட நாயனார் யானும்
   சோரமில்லா ஞான சமூகம் அமைந்திட
   சுத்தசன்மார்க்க நெறிதனை அருளுவேன்
4. அருளாக ஆற்றலாக வருகின்ற
   அனைத்துமே ஆறுமுகனார் வெளிப்பாடாகும்
   அருளமுதாம் குடிலமுது உண்ண
   அனைவருக்கும் அழியாமை இலகுவாகும்
5. ஆகவே அரங்கமகான் தர்மத்தை
   அனைவருமே வரவேற்று பாதுகாத்து
   ஜெகமெங்கும் மிகுதியாக வழங்கச் செய்து
   சித்தர்களை படைப்போம் கலியுகம் தன்னில்
6. தன்னிலே அரங்கன் வந்த அவதார நோக்கம்
   தட்டாது அனைவருக்கும் எட்டும்படி செய்து
   மண்ணுலகில் அரங்கமகான் ஞானம் வளர்ப்போம்
   மக்களை எல்லாம் மகான்களாக்கி அறுவடை செய்வோம்
7. செய்யவே கலியுகம் எங்கிலுமே
   செப்பிடுவேன் தர்ம பாதைகள் பெருகி
   ஐயன் முருகனை வணங்கும் சக்தியுமாகி
   அறிவிப்பேன் பேராற்றலாக எங்கும் ஞானம்
8. ஞான ஆற்றலாக நம்பிக்கை வடிவமாக
   ஞான தேசிகன் தரும் உபதேசங்கள்
   ஞான பண்டிதனார் வழிபாட்டை பெருக்கி
   ஞாலமதில் ஞானிகளை உருவாக்க நேரும்
9. நேர்மை கொண்டு கலியுக மக்கள்
   நெஞ்சினில் தர்ம சக்தி கொண்டு
   வருமுலகில் தொடர்ந்து வந்தாலே போதும்
   வையகம் படிப்படியாய் வளர்ச்சி நிலைகூடி

10. கூடியே ஞானவான்கள் தலைமை கொண்ட
குரு அரங்கன் துணையை கொண்ட
இடரென்பதே உலகினில் இல்லாத வண்ணம்
எல்லாவகை பாதுகாப்பும் தந்து இனிதே

11. இனிதே ஞானயுக மாற்றமாக
ஏழாம் படைவீட்டின் மகா சக்தியாக
கனிவேலவன் தலைமை கொண்ட பூமியாக
கருணை நிறைந்த ஞான ஆட்சியாக மாறக்கூடும்
அருளாசி முற்றே

–சுபம்–